**டிசம்பர் – 21**


# TNPSC துளிகள்

- பாகிஸ்தான் நாடானது தனது புதிய சட்டத்தின் ஒரு பகுதியாக கற்பழிப்பாளர்களுக்கு மரண தண்டனை மற்றும் இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- பிரதமர் மோடி 2021 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் ஜி7 மாநாட்டில் கலந்து கொள்வதற்கான பிரிட்டனின் பிரதமரான போரிஸ் ஜான்சனின் அழைப்பை ஏற்றுக் கொண்டு உள்ளார்.
    - இந்த மாநாடானது ஐக்கியப் பேரரசினால் நடத்தப்பட உள்ளது.
- இந்தியா மற்றும் வங்க தேசத்திற்கு இடையிலான 55 ஆண்டு பழமையான சிலாகட்டி-ஹால்டிபாரி (மேற்கு வங்கம்) இரயில் இணைப்பானது தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
    - இந்த இணைப்பானது 1965 ஆம் ஆண்டில் இந்தியா-பாகிஸ்தான் போரின் போது துண்டிக்கப் பட்டது.
- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் ஊரகப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காகவும் விவசாயிகளுக்கான கூடுதல் வருமானத்தை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி "வேதம் சார்ந்த ஓவியத்தை" வெளியிட்டுள்ளார்.
    - மாட்டுச் சாணத்தினால் உருவாக்கப்படும் இந்த ஓவியமானது காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையத்தின் மூலம் விரைவில் வெளியிடப்பட உள்ளது.
- இந்தியாவானது உலக அளவில் நேர்மையான விளையாட்டுச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக உலக ஊக்க மருந்து எதிர்ப்பு ஆணையத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை வழங்க முடிவு செய்துள்ளது.
    - இந்தியாவினால் வழங்கப்படும் இந்தப் பங்களிப்பானது சவுதி அரேபியா, சீனா மற்றும் எகிப்து ஆகிய அரசுகளினால் வழங்கப்படும் பங்களிப்பை விட மிக உயர்ந்ததாகும்.
- பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான முகமது அமீர் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.
- சான் சிட்ரோ என்ற ஒரு இயக்கமானது கியூபாவின் கலைப் பணிகளின் மீதான தணிக்கைக்கு எதிரான போராட்டமாக கியூபாவில் 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது.
- பிரசார் பாரதியின் தலைமைச் செயல் அதிகாரியான சசி சேகர் வேம்பதி அவர்கள் ஆசிய பசிபிக் ஒளிபரப்பு ஒன்றியத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- சமீபத்தில் இந்திய அரசு மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவை நாட்டின் ஊரகக் கட்டமைப்பு மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றிற்கு ஆதரவு அளிப்பதற்காக 1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- அமெரிக்க ஊடக ஆளுமை மற்றும் நிகழ்நேர தொலைக்காட்சிக் கலைஞரான கெய்லி ஜென்னர் என்பவர் போர்ப்ஸ் பத்திரிகையின் 2020 ஆம் ஆண்டின் அதிக ஊதியம் பெறும் ஆளுமையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## இ-சஞ்சீவனி தொலைதூர மருத்துவம்

- சமீபத்தில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது ஒரு மில்லியன் என்ற அளவில் இ-சஞ்சீவனி தொலைதூர மருத்துவ ஆலோசனைகளைக் கடந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- சுகாதாரச் சேவையை ஆன்லைனில் வழங்கும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது முறை இதுவாகும்.
- இது ஆயுஷ்மான் பாரத் – சுகாதார மற்றும் நல மையத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றது.
- அதிக எண்ணிக்கையிலான தொலைதூர மருத்துவ ஆலோசனைகளைப் பதிவு செய்துள்ள 2 மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவையாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## "நாணய மோசடியாளர்கள்" கண்காணிப்புப் பட்டியல்

- அமெரிக்க கருவூலத் துறையானது சுவிட்சர்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை நாணய மோசடியாளர்களாக அறிவித்துள்ளது.
- மேலும் இது தைவான், தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளைக் கண்காணிப்பு நாடுகளின் பட்டியலில் புதிதாகச் சேர்த்துள்ளது.
- இது டாலருக்கு எதிராக தங்களது நாணயங்களின் மதிப்பைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கின்றது.



### நேத்ரா (NETRA) கட்டுப்பாட்டு மையம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது விண்வெளி கடல்சார் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு வேண்டி பிரத்தியேகக் கட்டுப்பாட்டு மையத்தை அமைத்துள்ளது.
- இந்த மையமானது "நேத்ரா" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த மையமானது பெங்களூருவில் உள்ள ஐஎஸ்டிஆர்ஏசி வளாகத்திற்குள் அமைந்து உள்ளது.

### மைய வங்கிகள் மற்றும் மேற்பார்வையாளர்களின் அமைப்பு

- அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியானது காலநிலை மாற்ற அபாயத்தின் மீது கவனம் செலுத்தும் சர்வதேச மத்திய வங்கிகள் குழுவில் இணைந்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியைத் தவிர்த்து இதுவரை மைய வங்கிகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் என்ற அமைப்பின் உறுப்பினராக இல்லாத ஒரே உலக மைய வங்கி இதுவாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### நிதியியல் நிலைப்புத் தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 23வது சந்திப்பு

- சமீபத்தில் மத்திய நிதித்துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் இதற்கு தலைமை தாங்கினார்.
- இது 2010 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- இது நாட்டின் நிதியியல் ஒழுங்குமுறையாளர்களைக் கொண்ட ஒரு சட்டப்பூர்வமற்ற தலைமை அமைப்பாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், பொருளாதார விவகாரங்கள் துறைச் செயலாளர், மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம், காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ஆகியவை இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.
- மேலும் இது திவால் நிலை மற்றும் நொடித்தல் வாரியத்தின் தலைவரையும் கொண்டு உள்ளது.


## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### சிம்எஸ்-01 செயற்கைக்கோள்

- இது பிஎஸ்எல்வி-சி50 என்ற விண்வெளிக் கலத்தின் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தினால் ஏவப்பட்ட ஒரு தகவல் தொடர்பு செயற்கைக் கோளாகும்.
- இது அதிர்வெண் அலைக் கற்றையின் நீட்டிக்கப்பட்ட சி பட்டையில் சேவைகளை வழங்குவதற்காக செலுத்தப்பட்ட 42வது தகவல் தொடர்புச் செயற்கைக் கோளாகும்.
- இது இந்திய மைய நிலப்பகுதி, அந்தமான் நிக்கோபார் மற்றும் இலட்சத் தீவுகள் ஆகியவற்றிற்குச் சேவை அளிக்கும் திறன் கொண்டது.
- இது புவி ஒத்திசைவு மற்றும் சுற்றுவட்டப் பாதையில் சிஎம்எஸ்-01 என்ற செயற்கைக்


கோளைச் செலுத்த உள்ளது.

- இந்தச் செயற்கைக் கோளின் செயல்படும் காலமானது 7 ஆண்டுகளாகும்.
- இது பிஎஸ்எல்வி விண்வெளிக் கலம் மற்றும் இஸ்ரோவின் 52வது விண்கலம் ஆகும்.
- சிஎம்எஸ்-01 செயற்கைக் கோள் ஏவுதலானது உள்நாட்டிலேயே செலுத்தப்பட்ட 77வது பயணமாகும்.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்துச் செலுத்தப்பட்டது.




## லூன் திட்டம்

- லூன் திட்டமானது உலகில் உள்ள தொலைதூரப் பகுதிகளுக்கு இணைய வசதியை அளிப்பதற்காக பூமியின் அடுக்கு மண்டலத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கூகுள் நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகின்றது.
- சமீபத்தில் கூகுள் நிறுவனமானது தனது பலூன்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு வளியடுக்கு மண்டலத்தில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப் பட்டுள்ளதாக அறிவித்து உள்ளது.
- இந்தப் பலூன்கள் ஹீலியத்தினால் நிரப்பப்பட்டுள்ளன. இது 2.1 லட்சம் கிலோ மீட்டர்கள் அளவிற்குத் தொலைவைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.
- சமீபத்தில், லூன் ஆனது 318 நாட்கள் வான்வெளியில் இருந்ததன் மூலம் அதிக நாட்கள் வளியடுக்கு மண்டலத்தில் இருந்த பறக்கும் பொருள் என்ற ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய வெட்டுக் கிளிகள் – சிவப்புப் பட்டியல்

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (International Union for the Conservation of Nature - IUCN) வெட்டுக்கிளி நிபுணர் குழுவானது முதன்முறையாக இந்தியாவில் வெட்டுக்கிளிகளின் மீதான ஒரு சிவப்புப் பட்டியல் ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- இதுவரை, எந்தவொரு இந்திய வெட்டுக்கிளி இனமும் சிவப்புத் தரவுப் பட்டியலில் இடம் பெறவில்லை.
- இந்த ஆய்வானது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவற்றின் எல்லையில் அமைந்த நீலகிரி பல்லுயிர்ப் பெருக்கக் காப்பகத்தில் (Nilgiris Biosphere Reserve - NBR) தொடங்கப்பட உள்ளது.
- இந்த ஆய்வானது டெட்டிலோபஸ் திரிஷூலா அல்லது சிலாவின் பிக்மி திரிஷூலா எனப்படும் புதிய வெட்டுக்கிளி இனத்துடன் சேர்த்து NBR பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட 30 இனங்களையும் உள்ளடக்கியுள்ளது.
- சிலாவின் பிக்மி திரிஷூலா 2018 ஆம் ஆண்டில் கேரளாவில் உள்ள இரவிகுளம் தேசியப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் மீதான சிவப்புப் பட்டியலானது உலகில் உயிரியல் இனங்களின் உலகப் பாதுகாப்பு நிலைக்கான மிகவும் விரிவான ஒரு பட்டியலாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 100 மிகவும் சக்தி வாய்ந்த பெண்களின் போர்ப்ஸ் 2020 பட்டியல்

- இந்தப் பட்டியலில் தொடர்ந்து 10வது ஆண்டாக ஜெர்மனி நாட்டின் ஆட்சியாளரான ஏஞ்சலா மெர்க்கல் அவர்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- நியூசிலாந்து நாட்டுப் பிரதமரான ஜெசிந்தா ஆர்டெர்ன் மற்றும் அமெரிக்காவின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவரான கமலா ஹாரிஸ் ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பயோகான் நிறுவனரான கிரண் மசும்தார் ஷா, எச்சிஎல் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான ரோஷிணி நாடார் மல்கோத்ரா, லேண்ட்மார்க் குழுமத்தின் தலைவரான ரேணுகா ஜக்தியானி ஆகியோர் போர்ப்ஸ் பத்திரிக்கையினால் உலகின் 10 சக்தி வாய்ந்த பெண்களாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.

- இந்தப் பட்டியலில் நிர்மலா சீதாராமன் 41வது இடத்திலும் நாடார் மல்கோத்ரா 55வது இடத்திலும் மசூம்தார் ஷா 68வது இடத்திலும் ரேணுகா ஜக்தியானி 98வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.
- இந்தியாவின் முதலாவது முழுநேர பெண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆவார்.




## தங்க மயில் சுற்றுச்சூழல் மேலாண்மை விருது

- இந்திய எஃகு ஆணைய நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிற்கான இந்த விருதைப் பெற்றுள்ளது.
- இந்த விருதானது 1998 ஆம் ஆண்டில் உலக சுற்றுச்சூழல் அறக்கட்டளையினால் ஏற்படுத்தப் பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★